**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் நாள் வியாழக்கிழமை பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | முருகன் | தொழில் : | |
| த.பெ: | சுப்பிரமணியன் | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**16.11.2023 OS No.109/2019 பி.வா.சா.1** முருகன் **ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

1. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் இடம் வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதிக்கு பாத்தியமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளேன் என்றாலும், அதை எடுத்து கொடுக்க வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரிதான். நீதிமன்ற ஆணையர் அளந்தபோதுதான் நான் வாதி இடத்தில் வீடு கட்டியுள்ளேன் என்ற விபரம் எனக்கு தெரிய வந்தது என்றால் அதற்கு முன்பே நான் வீடு கட்டியிருந்தபோதே அவருக்கு தெரியும்.

2. நான் வீடு கட்டியுள்ள புல எண் தெரியுமா என்றால் புல எண் தெரியும். ஆனால் தற்போது ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் சர்வே எண்.238/1பி1 எனக்கு பாத்தியமானது என்றால் சரிதான். சர்வே எண்.238/1பி1 எனது தகப்பனார் பெயரில் உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண்.238/1பி1 எனக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியிருப்பதில் வருவாய் ஆவணங்களில் மாயாண்டி மகன் சுப்பிரமணியன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டா சர்வே எண்.238/1பி1க்குரியது என்றால் சரிதான்.**(சாட்சி ஒப்புக்கொண்டதால் பட்டா வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**3.** என் அப்பா சுப்பிரமணியனின் அப்பா பெயர் என்ன என்றால் கருப்பணன் ஆகும். சர்வே எண்.238/1பி1 மாயாண்டி மகன் சுப்பிரமணியன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது தகப்பனாரின் இறப்புச்சான்றிதழ் என்றால் சரிதான். .**(சாட்சி ஒப்புக்கொண்டதால் இறப்புச்சான்றிதழ் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** நான் தாக்கல் செய்துள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணமான பி.வா.சா.ஆ.1 சர்வே எண்.238/1 என்றுதான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அப்பா எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள சொத்தை வங்கியில் அடமானம் வைத்து கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

4. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படம், குறுந்தகடு நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளக்க வரும்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 புகைப்படத்தில் உள்ள வீடுதான் வாதியின் இடத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா 2-ம் லக்க சொத்தான 238/1-ல் கிழமேல் 32 அடி, தென்வடல் 12 அடி அளவில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். வாதியின் இடத்திற்குள் என் வீடு வருகிறது என்பது

ஆணையர் அளக்கும்போதுதான் தெரியவந்தது என்றால் அதற்கு முன்பாகவே தெரியும்.

5. தாவா சொத்திற்கு அருகில் எனக்கு வேறொரு வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்திற்கு அருகில் உள்ள மற்றொரு வீட்டின் வீட்டு வரி ரசீதுகள்தான் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தார்சு வீட்டின் ரசீதுகள்தான் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ரசீதுகள் அனைத்தும் ஓட்டு வீட்டின் ரசீதுகள் என்றாலும், தார்சு வீட்டிற்கு நான் இன்று வரை ரசீதுகள் போடவில்லை என்றாலும் சரியல்ல. தார்சு வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியும், தற்போது ஞபாகம் இல்லை. தார்சு வீட்டிற்கு எவ்வளவு ரசீது போடுவார்கள் என்றால் வருடத்திற்கு தகுந்தாற்போல் ரசீதுகள் போடுவார்கள்.

6. கிராம ஊராட்சியில் தார்சு வீட்டிற்கு ரூ.110/-ம், ஓட்டு வீட்டிற்கு ரூ.55/-ம் ரசீது போடுவார்கள் என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள ரசீதில் ரூ.55/- போட்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ரசீதிற்கும், தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. மின் கட்டண ரசீது ஓட்டு வீட்டிற்குரியது என்றால் சரியல்ல. தார்சு வீட்டிற்குரியது ஆகும். பி.வா.சா.ஆ.6 ஆவணமானது க.எண்.1/34/ஏ-க்குரியது என்றால் எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஊராட்சி ஆவணங்களில் ஓட்டுவீடா, தார்சுவீடா என்று குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை.

7. நான் தாக்கல் செய்துள்ளவை ஓட்டு வீட்டின் ரசீதுகள் என்றும், வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வாக்களார் அடையாள அட்டையில் க.எண்.1/34 என்றுதான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள குடும்ப அட்டையில் கதவு எண் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. எனது ஆதார் அட்டையிலும் கதவு எண் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. வாதி எத்தனை லக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியும், தற்போது தெரியவில்லை.

8. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சர்வே எண்.238/1பி/1 எனக்கு பாத்தியப்பட்டது என்று கூறியிருப்பதில் அதற்கான வருவாய் ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.238/1பி/1 எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு நான் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் சர்வே எண்.238/1க்குரியது என்றாலும் எனக்கு படிக்க தெரியாது. நான் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.238/1பி/1 எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு நான் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யாமல் எனது எதிர்வழக்குரையிலும், நிருபணவாக்குமூலத்திலும் வெண்ணிலையாக கிரையம் பெற்ற சொத்து என கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேன்.

9. சர்வே எண்.238/1பி/1-ல் கிரையம் வாங்கியதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் கிரையப்பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு பாத்தியமானது என கூறியுள்ள சர்வே எண்.238/1பி/1 ஆனது மாயாண்டி மகன் சுப்பிரமணியனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், அதில் எங்களுக்கு பாத்தியமோ உரிமையோ இல்லை என்றாலும் சரியல்ல. சர்வே எண்.238/1பி/1 மாயாண்டி மகன் சுப்பிரமணியன் பெயரில் இருப்பதால் என் அப்பா பெயர்

சுப்பிரமணியன் என்பதை பயன்படுத்தி மோசடியாக ஆவணங்கள் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சர்வே எண்.238/1பி/1 மாயாண்டி மகன் சுப்பிரமணியன் பெயரில் உள்ளதால்தான் அவர் பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எனது தகப்பனாரின் இறப்புச்சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

10. எனது தகப்பனாரின் இறப்புச்சான்றிதழ் தாக்கல் செய்தால் கருப்பணன் மகன் சுப்பிரமணியன் என்ற உண்மை பெயர் தெரிந்துவிடும் என்பதால் எனது தகப்பனாரின் இறப்புச்சான்றிதழை தாக்கல் செய்யாமல் உள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் இறப்புச்சான்றிதழ் என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். வாதியின் 2-ம்லக்க சொத்தில் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள வீட்டை இடித்து காலி செய்து ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

11. தாவா சொத்திற்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், நான் எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றாலும் சரியல்ல. தாவா 2-ம்லக்க சொத்தில் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்ணும், நான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள புல எண்ணும் வெவ்வேறு என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court
read over/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.